94

உ

முருகன் துணை

திரிசிரபுரத்திலும் ஸ்ரீரெங்கத்திலும்

கொள்ளிடம் காவேரியில்

வெள்ளம் வந்த

நடை அலங்கார சிந்து

...வருஷ ஆடி-மீ 3உ 1924-வருஷம் ஜுலை-மீ 18உ

...சாதகாரவீதியிலிருக்கும் மன்னார்குடி

நேட்டிவ் டாக்டர்

...லகிருஷ்ண நாயுடு இயற்றியதை

...சேகரன் பிழை திருத்தி

...சி ஸ்ரீயட்டிவார் குழலம்பாள் பிரஸில்

அச்சிடப்பட்டது.

O-, IMKN, K
N1Z4
181291.

இதன் விலை அணா 2.

உ

நடை அலங்கார சிந்து.

விருத்தம்.

கற்பக பிள்ளையாரே கார்த்திடும் விநாயகரே
சித்திர வல்லவனே, சிறப்புடன் பாடுகிறேன்.
பக்தியும் சித்திபோச்சு, ஜனங்கள்பாகெதி அடையலாச்சு
பக்தியாய் பாடினேன் நான் பாலன் கோபால கிருஷ்ணன்.

தெம்மாங்கு

1. கண்மணியே மாதரசே கதிர் வடிவேல் துணையிருக்க, கொள்ளிடமும் காவேரியும் கரைபுரண்டு ஓடுதடி (காணலங்காரம திருச்சி பார்க்க விநோதம்)
2. கூடவந்து உதவிசெய்யும் குமரகுருதற்பரனே பாடிவாரேன் பாலன் நானும் பதத்துக்கருள் புரிவாய் (காணலங்காரம்)
3. ஆயிரத்து தொளாயிரத்து இருபத்தி நாலாவருடம் ஆனதொரு ஜூலை மாதம் பதினெட்டாந் தேதிதனில் (காணலங்காரம்)
4. திருச்சிநகர் மேல்புறத்தில் குடமுருட்டி ஜலம்பெருக பாலம் தெரியாமலே பெருகுதடி ஜலத்தால் வெள்ளம் (காணலங்காரம்)
5. ஸ்ரீரங்கம் ஸ்டேஷன்போச்சு சிகரட்பீடி குடிக்கலாச்சு வாட்டர் பைப் மேஸ்திரிகள் தெப்பம்போட்டு மிதக்கலாச்சு (காணலங்காரம்)
6. இருப்புப்பாதை லயினும்போச்சு இனி இல்லாத சொகுசும் மாச்சு டைலட் சோப் குளிக்கலாச்சு அம்மாமார்கள் ஜாகிட் ரவிக்கை போடலாச்சு (காணலங்காரம்)
7. கரூர் லயினும்போச்சு கனத்த தந்திகள் முறியலாச்சு பேஷ்பவுடர் அடிக்கலாச்சு சில்க்கர்சீப் பொட்டுமாச்சு (காணலங்காரம்

8. மோட்டார்வண்டி வேகம்போச்சு தலை சுட்டைகள் பரக்கலாச்சு டான்சுலேடி யோகம்போச்சு தனியாய் படுத்துத் தூங்க லாச்சு (காணலங்காறம்)

9. சணுகால்பறைந்த வேஷ்டிபோச்சு கால்சட்டை டௌசர் பூட்ஸும்போச்சு கனவான்கள் தலைமேல்மூட்டை தூக்கிக் கொண்டு நீந்தலாச்சு (காணலங்காறம்)

10. போட்டசட்டை வாங்காதாரும் பூட்ஸ்களை கழட்டாதாரும் மாறி வெள்ள ஜலத்தினுலே மதியயங்கி தவிக்கிறூர்கள் (காணலங்காறம்)

11. முத்தரசன் முருங்கப்பேட்டை மூழ்கியேகிடக்கலாச்சு புஞ்சை நஞ்சை நிலங்களெல்லாம் மண்ணுல் மறையலாச்சு (காணலங்காறம்)

12. உய்யகொண்டான் குடமுருட்டி கனத்தவெள்ளபெருக்கதினுல் சிந்தாமணிகடைவீதி தரைமட்டமாய் போகலாச்சு (காணலங்காறம்)

13. சேரியிலே புகுந்தவரும் நாற்றசேற்றை அணிந்தவரும் கறை கடந்து போனவுடன் கனத்த சென்டை பூசுறூர்கள் (காணலங்காறம்)

14. பருசு தறையுமில்லை பார்ப்பதற்கு ஒருவரில்லை பத்திபத்திய கும்பல் பறக்குதடி ஜனங்களெல்லாம் (காணலங்காற

15. சிந்தாமணி கடைவீதி ஜலத்தினுல் மூழ்கிருக்க பள்ளுபல சேரியிலே பறந்ததடி ஜனங்களெல்லாம் (காணலங்காறம்)

16. ஒத்து ஒத்து என்றுசொல்லி உறுமுகின்ற பார்ப்பனர்கள் சேரி முத்து முத்து என்று சொல்லி முழுதும் நடந்தாரடி (காணலங்காறம்)

17. கள்ளுகடையும்போச்சு சுனமான பொருளும்போச்சு கள்ளதன மான பெருத்த குடியும்போச்சு (காணலங்காறம்)

18. சிந்தாமணி ரோட்டதினில் நேர்ந்த வெள்ளப் பெருக்கதினுல் மெயின்ரோட்டு ரஸ்தாவிலே பெருத்த உடைப்புமாச்சு (காணலங்காறம்)

19 யானை இறங்குவதற்கு அண்டாதபள்ளாபாச்சு போலீஸ் லபன்
களும் சின்னபின்னமாக போச்சு (காணலங்காறம்)

20. பெட்டிகளும் பேழை போச்சு பெண்டுபிள்ளை நகையுபோச்சு
ஏழை குடிகளெல்லாம் ஏங்கி தவிக்கலாச்சு(காணலங்காறம்)

21. கன்றுகளும் மாடுகளும் கனமான பொருளும் போச்சு கட்ட
துணி இல்லாமலே கதறி தவிக்கலாச்சு (காணலங்காறம்)

22. கோட்டையிலே காளியவள் குடிபுகுந்தாள் இன்னேரத்தில்
கொள்ளை இட்டு வாருகிறாள் கோடி ஜனங்களைத்தான்
(காணலங்காறம்)

23. அம்மாளும் இத்தருணம் அமர்ந்திருக்க வேணுமென்று நன்
மணியே வேண்டுகின்றேன் நாடி அருள்புரிவாய்
(காணலங்காறம்)

24. உன்னை பணிவதற்கு உலகமெல்லாம் காத்திருக்க உள்ளங்
குளிர்ந்திருந்து உலகமெல்லாம் கார்க்கவேணும்
(காணலங்காறம்)

25. கோணக்கரை உடைப்பதினால் கொடிய ஜலத்தின் வெள்ளம்
தாரணியில் ஜனங்கள் கஷ்டம் தாங்கமுடியவில்லை
(காணலங்காறம்)

6. கீழ சிந்தாமணியாம் கீர்த்தியுள்ள மாடிகளாம் பூர்த்தியாக
ஜலப்பெருக்கம் புகுந்ததடி இன்னேரத்தில் (காணலங்காறம்)

7. தண்ணீர்க்குள் மாடிகளும் தழைத்து மூழ்கிருக்க பெண்டு
பிள்ளை புருஷரோடு புறப்பட்டார்கள் வீட்டைவிட்டு
(காணலங்காறம்)

28. நகைநட்டு சாமான்களை நங்கையர்கள் எடுக்கவில்லை படுக்கை
தலையாணி மெத்தை மிதக்குதடி தண்ணீர்மேல்
(காணலங்காறம்)

29. அண்டா தோண்டிகளும் அடியோடே போகுதடி கொண்டா
டும் கொலு ஜாமான் கூடவே போகுதடி (காணலங்காறம்)

30. சாமானை பார்ப்பவரும் ஓலமிட்டழுபவரும் பார்த்திருக்க
கோபாலகிருஷ்ணன் பாடிவந்தேன் சிந்துதன்னை
(காணலங்காறம்)

ஓடப்பாட்டு.

ஏலேலோ ஓ, ஓ, ஓ. ஓ, ஏலிலேலேலோ ரெங்கையா
ஏலேலோ ஓ, ஓ, ஓ, ஓ, ஏலிலேலேலோ ஆலிலேமேல்
கண்வளரும் எங்கள் ஆதிரெங்கன் சேவை
கென்று ஓலமிடும் பாரிவெள்ள மகிமையை
நான் சொல்லிவாரேன்.

முடுகு.

டில்லி கொல்லாபுரம் சிகரமே சொல்லும்-கொச்சிமலே குடகு மலே பச்சைமலே வாடை-கல்லுபோல் கதறியே பெய்த மழைபால்-காணாத ஜல வெள்ளம் கதறியேநிற்க-மேரு மலேயாளம் அழிந்துமே போக-மேற்காகஜலவெள்ளம் பெருகியேஓட-கண்ணனூர் அணைக் கட்டை தாண்டியே ஜலமும்-தாங்காத வெள்ளமது வருவதைபாரு-பாங்கான பவானி பாழாக போக-பாரிலே பரமனே ஜனங்களும் நோக-சேலமும் தம்பமும் பட்டியும் போச்சு-செபலான வீடுகள் மண்ணு மேடாச்சு-யானேயும் இரண்டுமே அப்பவே போச்சு-அணி யான பெட்டிகள் மிதக்கவேலாச்சு-குணசேகரத்தில் வெள்ளம் பெருக்கமாய் போச்சு-சீனிவாசபெருமாளும் மூழ்கவேலாச்சு-முடி வாக ஜலவெள்ளம் பெருக்கமதாச்சு-கரைகள் தெரியாமல் வெ[illegible] மது வரவே-கதறியே கொள்ளிடம் பாலமது விழவே-ஜனங்கள் [illegible] ளர் திருடர் போல் கலங்கியே நிற்க-காவேரி ஜலவெள்ளம் துடர[illegible] யேவரவே-கனமான கட்டடம் திட்டமாய் வெடிக்க-காண[illegible] கைபிடி சுவர்களும் இழுக்க-இந்தவிதமான சந்தியில் ரெங்கன் [illegible] விடுக்க சக்ரம் தொடுக்க-மூட்டை யடுக்க காவல் படுக்க பந்தோபஸ்தாகவே கார்க்கிறார் பாரடி—ஏலேலோ ஓ, ஓ, ஓ, ஓ,

---

கும்மி

1 கும்மிபடி பெண்கள் கும்மியடி கூந்தல் குலுங்கவே கும்மியடி செம்மையாயிருந்த மாப்பழக்கடையும் சீர்குலைந்ததை பாருங்கடி

2 கொள்ளிடங் காவேரி வெள்ளத்தினால் வந்த கோடி ஜனங்கள்
1 படியும்படி உள்ளத்தில் ஈசன் விதித்த விதிதானே ஒன்றும் அரி
யேனே பாருங்கடி.

3 புஷ்யமண்டப படித்துறை ஓரத்தில் பொங்கியே ஓடப்பு
தானுங்காண வெள்ளிபனை சாலைரோட்டும் போச்சுதங்கே வேண
பொருள்கள் மடிந்ததுபார்.

4 மாங்கனி தென்னை பிலாச்சோலை அங்கே மண்டபங்களும்
விழுந்ததுபார் குங்குகொட்டார வீடுகளெல்லாம் சொள்ளை இட்டது
பார் வெள்ளமது.

5 வீரமாகாளி கோவிலருகே ஜலம் வேணமட்டும் ஓடி நிற்கை
யிலே, கேட்கும் உடுக்கோசை காணோமடி அங்கே கேள்வி கேட்ப
தற்கு என்ன செய்வோம்,

6 சத்தியக் கட்டுநிலை தவறாமலே சாற்றிவந்தாள் அவள் பூர்த்தி
செய்வாள் நீதிதவறி நிலைதவறினதினால் சோரவிட்டாள் கையை
வீரியவள்,

2 7 தைமாச கெருடமண்டபமாம் இது கண்மணியே இங்கே
பாரடி நீ மண்டபகீழ் புறமாக வெள்ளம் வந்து மலையாணகோட்டை
3. உடைத்ததுபார்,

8 வீரேஸ்புரமென்று சொல்லுவார்களங்கேவேண கனவான்கள்
4. தி னிருந்தார் கண்ட வெள்ளத்தினால் கொண்ட பெண்டுபிள்ளை
ட்டமாய் ஓடுறார் பாருங்கடி.

9 கட்டின வீடெங்கும் பாழாச்சு அந்த கரைகள் முழுதங்கே
5. நீராச்சு சுற்றிலும் நாகதாளிகள் மண்ணுமேலே சேர்ந்து புரண்டு
குடியாச்சு

10 பெண்டுபிள்ளை என்று தானழுவார் சிலர் பொன்பொருள்
6. போச்சென்று தானழுவார் பெட்டி நகைகளும் சட்ட துணிகள்
போனதைபற்றியே தானழுவார்.

11 பக்தியில் முக்தி அடைந்தவராம் முந்தி யாமதுரை கவியாழ்
7. வாராம் முக்திக்கு முன்னாலே வைத்த புஷ்பவனம் மூழ்கியேபோன
தை பாருங்கடி.

12 கண்ட திருமேனி சரமுமில்லை செங்கன் கொண்டைப் பூமாலையும் தானுமில்லை அண்டம் முழுதும் ஆளுகின்ற அந்த அய்யனுக்கே புஷ்பம் அற்றதடி.

13 மோட்சங் கொடுக்கும் படித்துறையாம் இது போகனரங்கன் திருத்துறையாம் ஆட்சியாய் நின்ற அம்மாமண்டபம் போன அனியாய கோலத்தைப் பாருங்கடி

14 கோபுரத்து குடியும் போச்சு அங்கே கீர்த்தி உள்ளோர்களும் ஓடலாச்சே ஆடுமாடுகளும் பேடைபேழைகளும் அப்பலே பருசில் தான் மிதக்க.

15 அம்மாமண்டபம் எஸ்டன்சுகட்டிய அருமையை பாரடி பெண்மயிலே கட்டின கட்டிடம் காணோமென்று ஜனம் கலங்கி தவிப்பதை பாருங்கடி.

16 சொல்லவும் நாவு நடுங்குதடி பெண்ணே சூழ்ந்த ஜலத்தின் பெருக்கதினால் பள்ளமேடு தெரியாமல் ஜலம் பாய்ந்து வருவதை பாருங்கடி.

18/291

17 தந்திமரத்தையும் பாரடி கண்ணே நீ தரையில்கிடக்கிற சீரதைப்பார் தண்ணீரில் கம்பி சுற்றிக்கொண்டு காலே மெள்ள இழுப்பதை பாருங்கடி.

18 இந்த பட்டினத்திலேயொருவன் ஏகசக்ரவர்த்தி யிருக்க இத்தனை உயிரை கொண்டுபோவதற்கு என்ன உபாய கள் செய்தானோ.

19 ஆலிலைமேல் பள்ளிகொண்டாரும் மூந்தி அப்பவே தெப்பம்போல் தான் மிதந்தார் அந்த தெரிசனம் பார்க்காத ஜனங்கள் இப்போ சிந்தை குளிரவே பார்த்தோமடி.

20 பார்த்த உடன் பயமாகுதடி பெண்ணே பரிமளங்கள் அங்கே வீசுதடி பூர்த்தியாக ஜலம் வந்து பூந்ததடி பொங்கும் மடப்பள்ளி தான்நிறைய

21 ஸ்ரீரங்கம் சுற்றிலும் வீடுகள் போச்சு அங்கே சேர்ந்த குடிகளும் பாழாச்சு அத்தனை வீட்டையும் பாழாக்கி வெள்ளம் அடியோடழித்ததை பாருங்கடி.

22 நாகப்பிள்ளை மண்டபத்தினருகினில நண்மணியே பள்ளங் காணுதடி பள்ள நந்தவனம் போகுமுன்னே ஜனம் பதறி தவிக்கிறார் பாருங்கடி.

23 ஆதியில் திருவானைக்காவல் என்று அன்பாக சொன்னேனே பெண்மயிலே நீதியான முறக்காரதெருவதின் நேர்மையை சொல்லு றேன் கேளுங்கடி.

24 கட்டின வீடங்கே காணோமடி பெண்ணே கடையில் ஜனங்களை பாரடி நீ பெட்டி சட்டிகளை தூக்கிக்கொண்டு ஜனம் போகின்ற வேடிக்கை பாரடி நீ.

25 கொள்ளிடம் பாலம் விழுந்ததுமே ஜனம் கோவென்ற சத்தமாய் சென்றதுமே அக்கரை போனவர் இக்கரை வராமல் அலைந்து தவிப்பதை பாருங்கடி.

26 வண்டி முழக்கமும் தான்போச்சு பெண்ணே விரிவான வியாபாரம் சீர்போச்சு வண்டிதாருகள் கொண்டு பிழைப்போரும் வகை கெட்டலைவதை பாருங்கடி,

27 ஜெய்புநாதரை விடவுமில்லை ஜலம் நன்மணி இங்குபாரடி நீ அம்மன் சத்தி கோவிலருகாமல் ஆபத்தான வெள்ளம் தானுமில்லை

28 காவற்காரத்தெரு தானும் போச்சு தங்கே கொண்டயம் பேட்டை உடப்புமாச்சு இரண்டுவரிசை இருநூறு வீடுகள் இல்லாமால் போனதை பாருங்கடி.

29 தம்பிரான் தெருவை தாக்கினதாம் வெள்ளம் தாவிபவடபுர மதினில் ஆங்காரமாகவே சன்னதி வாசலில் ஆனைப்பள்ளம்போல் தான்பறிக்க

30 பள்ளத்தைப் பார்த்து பயப்படாதே பெண்ணே கோபால கிருஷ்ணன் ஓதும் கும்மிபாட்டை சிந்தைகலங்காமல் செப்புவாயடி நீ சேயிழையே இந்த பூமிதனில்.

முதல்பாகம் முற்றிற்று.

இரண்டாம்பாகம் வெளிவரும்,